தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

02.09.2013

**கோவையில் காய்கறி சேமிப்பு மையங்கள் அமைக்க ரூ.17 கோடி ஒதுக்கீடு**

கோவையிலும் 4 மாவட்டங்கள் இணைக்கப்பட்டு காய்கறி சேமிப்பு மையங்களை அமைக்க ரூ.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்தார்.

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், தொண்டாமுத்தூர் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பாக, பெருநகர காய்கறி வளர்ச்சித் தொகுப்புத் திட்டத்தின் கீழ் காய்கறி சேகரிப்பு மையத்தை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார் அமைச்சர் செ.தாமோதரன். இதில் அமைச்சர் பேசியது:

பெருநகர காய்கறி சேகரிப்பு மையத் திட்டத்தின் நோக்கம் விவசாயிகள் தங்கள் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், அதே சமயத்தில் நுகர்வோருக்கு குறைந்த விலையில் தரமான காய்கறிகள் கிடைக்கவும் வேண்டும் என்பதே ஆகும்.

கோவையிலும் 4 மாவட்டங்கள் இணைக்கப்பட்டு, காய்கறி சேமிப்பு மையங்களை அமைக்க ரூ.17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திருச்சியில் ரூ.12 கோடி மதிப்பில் காய்கறி சேகரிப்பு மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பொள்ளாச்சியில் 404 விவசாயிகள் 24 குழுக்களாக அமைத்துள்ளனர். இந்த குழுக்கள் மூலம்தான் காய்கறிகள் சேகரிப்பு மையத்திற்கு கொண்டு வரப்படுகிறது. இந்தக் குழுக்களுக்கு வாகனம் வாங்க ரூ.24 லட்சம் ஒதுக்கப்பட்டு, அதில் 40 சதவீதம் மானியமாக வழங்கப்படும். மேலும், மலைப்பகுதியில் உள்ளவர்களுக்கு 10 சதவீதம் கூடுதலாக மொத்தம் 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

விவசாயிகள் விரும்பினால் தனியாக விற்பனை நிலையங்களை அமைத்துக் கொள்ளலாம். அதற்காக 40 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

தோட்டக்கலைத் துறை காய்கறி சேமிப்பு மையங்களைப் போல விவசாயிகளும் தனியாக சேகரிப்பு மையங்களை உருவாக்கிக் கொள்ளலாம். இதற்காக ரூ.8 லட்சம் வரை வழங்கப்படுகிறது. அதில் 50 சதவீதம் மானியம் ஆகும்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை 6123 ஹெக்டர் பரப்பளவில் காய்கறி பயிரிடப்படுகிறது. இதில் பொள்ளாச்சி பகுதியில் 60 ஹெக்டர் வரை பந்தல் காய்கறி பயிரிடப்படுகிறது.

தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் 113 விவசாயிகள் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இங்கு 120 ஹெக்டரில் காய்கறி உற்பத்தி செய்யப்படுகிறது.

உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளை விற்பனை செய்ய சந்தைக்கு கொண்டு செல்லும் போது சில நேரங்களில் விலை வீழ்ச்சி ஏற்படும். மற்ற சந்தைகளின் விலை விவரம் தெரியாது.

இத்தகைய குறையினைப் போக்க, தமிழ்நாட்டில் உள்ள மற்ற சந்தைகளின் விலை விவரங்களை இந்த மையத்தில் தெரியப்படுத்துகிறோம். இதனைப் பயன்படுத்தி விவசாயிகள் விலை நிர்ணயம் செய்து காய்கறிகளை விற்றுக் கொள்ளலாம் என்றார்.

தோட்டக்கலைத் துறை ஆணையர் சத்யபிரதா சாகு பேசியது: இந்தத் திட்டம் முழுக்க விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் உருவாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 9 மாவட்டங்களில் 16 காய்கறி சேகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மையத்திற்கு அரசு நிதி ஒதுக்கி இருந்தாலும். இதை விவசாயிகள்தான் நிர்வகிக்கப் போகிறார்கள்.

கூட்டுறவுத் துறை, விவசாயத் துறை, தேட்டக்கலைத் துறை ஆகியவை இணைந்து இத்திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்றார்.

பொள்ளாச்சி எம்.பி. கே.சுகுமார், எம்எல்ஏக்கள் எஸ்.பி.வேலுமணி, எம்.கே.முத்துக்கருப்பண்ணசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் க.கற்பகம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஆர்.ராமமூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இணை இயக்குநர் பெரியசாமி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் லட்சுமிராஜ், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ஆ.ராமகிருஷ்ணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**வெல்லம் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் அருகேயுள்ள பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தையில் வெல்லம் விலை உயர்ந்ததால், கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பரமத்திவேலூர் வட்டத்தில் முக்கிய பணப் பயிர்களான கரும்பு, வெற்றிலை, வாழை உள்ளிட்டவைகள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன.

இதில், சோழசிராமணி, கொத்தமங்கலம், ஜேடர்பாளையம், அய்யம்பாளையம்,பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், வேலூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் கரும்பு பயிர் செய்யப்பட்டு வருகிறது.

இங்கு விளையும் பதிவு செய்யப்பட்ட கரும்புகள் மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும், பதிவு செய்யப்படாத கரும்புகள் ஜேடர்பாளையம், சோழசிராமணி, பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, அண்ணாநகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வெல்லம் காய்ச்சும் ஆலைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

வெல்ல ஆலைகளுக்கு வெட்டப்படும் கரும்புகள் மூலம் அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் தயார் செய்யப்படுகின்றன. அவ்வாறு, தயார் செய்யப்பட்ட வெல்லங்கள் 30 கிலோ கொண்ட சிப்பங்களாக கட்டப்பட்டு பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்படுகிறது. பின்னர், அவை தரம் பிரிக்கப்பட்டு புதன் மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெறும் ஏலத்தில் ஏலம் விடப்படுகிறது.

ஏலம் எடுப்பதற்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து ஏலம் எடுத்துச் செல்கின்றனர். ஏலம் எடுக்கப்படும் வெல்லங்கள் ரயில், லாரிகள் மூலம் பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரம், கேரளம், கர்நாடகம், உத்ராஞ்சல் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 30 கிலோ கொண்ட அச்சு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1200-க்கும், உருண்டை வெல்லம் ரூ. 1,000-க்கும் ஏலம் போனது. ஆனால், சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் அச்சு வெல்லம் ரூ.1,300-க்கும், உருண்டை வெல்லம் ரூ.1,200-க்கும் ஏலம் போனது.

விலை உயர்வு காரணமாக கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**விவசாயத் தொழிலாளர் சங்க மாநாடு**

போடி அருகே நடைபெற்ற விவசாயத் தொழிலாளர் சங்க மாநாட்டில், நூறு நாள் வேலைத் திட்டத்தில் முழு ஊதியம் வழங்க வலியுறுத்தப்பட்டது.

போடி அருகே சில்லமரத்துப்பட்டியில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்க போடி தாலுகா முதல் மாநாடு ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது. தாலுகா தலைவர் ஆர். போஸ் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் மொக்கராசு, மாவட்டச் செயலர் அண்ணாமலை, விவசாயச் சங்க மாநிலக் குழு உறுப்பினர் ராஜப்பன், விவசாய தொழிலாளர் சங்க தாலுகா செயலர் செல்வராஜ், இந்திய ஜனநாயக வாலிபர் சங்க தாலுகா செயலர் தங்கப்பாண்டி உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

மாநாட்டில், 100 நாள் வேலைக்கு அரசு அறிவித்துள்ள சட்டப்படியான கூலியான ரூ. 148 வழங்க வேண்டும், தொழிலாளர்களுக்கு தட்டு, மண்வெட்டி, கடப்பாறை உள்ளிட்ட கருவிகளை ஊராட்சி நிர்வாகமே வழங்க வேண்டும், வியாழக்கிழமை தவிர மற்ற நாள்களில் வருவோரை வேலைக்கு அனுப்ப வேண்டும், தொழிலாளர்களுக்கு அடிப்படை மருத்துவ வசதி செய்து தரவேண்டும்

என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் அணைக்கரைப்பட்டி, சில்லமரத்துப்பட்டி, சிலமலை, சூலப்புரம், மணியம்பட்டி, டொம்புச்சேரி, உப்புக்கோட்டை, பாலார்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் பங்கேற்றனர். தாலுகா பொருளாளர் தொட்டப்பன் நன்றி கூறினார்.

**விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை சேகரிக்கும் மையம் தொடக்கம்**

காஞ்சிபுரம் மாவட்ட தமிழ்நாடு அரசு தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் விவசாயிகளிடமிருந்து காய்கறிகளை சேகரிக்கும் மையம் செங்கல்பட்டு பழைய பஸ் நிலையத்தில் உள்ள எம்.எல்.ஏ. அலுவலகம் அருகில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்பட்டது.

விழாவில், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் சித்ரசேனன் கலந்து கொண்டு மையத்தையும், ஏல விற்பனையையும் தொடங்கி வைத்து பேசியது:

தோட்டக்கலைத் துறையின்கீழ் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை லாபமான முறையில் விற்பனை செய்து வளமான வாழ்வு பெற பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களும் பசுமையான காய்கறிகளைப் பெறலாம். காய்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளை குழுக்களாக அமைத்து அக்குழுக்களில் இருந்து பெறப்படும் காய்கறிகள் செங்கல்பட்டு பழைய பஸ் நிலையம் பின்புறம் உள்ள செங்கல்பட்டு எம்.எல்.ஏ. அலுவலகம் அருகில் உள்ள சேகரிப்பு மையத்தில் வைத்து ஏல முறையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

தினமும் காலை 8 மணி முதல் 11 மணி வரை காய்கறிகள் ஏலம் விடப்படும். இதன் மூலம் விவசாயிகள் அனைவரும் காய்கறிகளை கொண்டு வருவதற்கும் ஏலம் கேட்பதற்கும் இம்மையம் செயல்படவுள்ளது என்றார் அவர்.

தொடக்க விழாவுக்கு, மதுராந்தகம் எம்.எல்.ஏ. கணிதாசம்பத் தலைமை தாங்கினார். தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கோமதி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சம்பத்குமார், பண்டக

கூட்டுறவு மைய இயக்குநரும், அதிமுக நகரச் செயலருமான சி.வி.என்.குமாரசாமி, நகரமன்ற உறுப்பினர்கள் முரளிதரன், கோபி, செந்தில்குமார், ஜீவானந்தம், நித்தியானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ஏ.சந்துரு வரவேற்றார்.

மேலும் விழாவில், செங்கல்பட்டு ஆர்டிஓ வி.தங்கராஜ், வட்டாட்சியர் ரவி, செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் (பொறுப்பு) பொறியாளர் கணேசன், முன்னாள் நகரமன்றத் தலைவர் குப்பன், சாந்திராஜன் உள்ளிட்டோர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காஞ்சிபுரம் தோட்டக்கலை துணை இயக்குநர் மற்றும் திருக்கழுகுன்றம் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தினர் செய்திருந்தனர்.

திருப்போரூர் தோட்டக்கலைத் துறை உதவிஇயக்குநர் அமானுல்லா நன்றி கூறினார்.

**வேளாண் துறைக்கு தனி பட்ஜெட்: விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

வேளாண் துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும் என விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதுச்சேரியை அடுத்த வில்லியனூரில் விவசாயிகள் சங்க மாநிலக்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு சங்கத் தலைவர் மாசிலாமணி தலைமை வகித்தார்.

தீர்மானங்கள்: 60 வயது கடந்த அனைத்து விவசாயிகளுக்கும் மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

புதுச்சேரிரி, காரைக்கால் விவசாயிகளின் பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட பயிர் இழப்புக்குரிய காப்பீட்டுத் தொகையை உடனே வழங்க வேண்டும். ரயில்வே துறையைப் போல், வேளாண் துறைக்கென தனி

பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

பொதுச்செயலர் கீதநாதன், தென்னை விவசாயிகள் சங்கத்தின் தேசியக்குழு உறுப்பினர் கலியமூர்த்தி உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

**ஒட்டன்சத்திரம் பகுதியில் விவசாயப் பணிகள் தொடக்கம்**

ஒட்டன்சத்திரம் பகுதியில் விவசாயிகள் முதல் கட்ட விவசாயப் பணிகளை தொடங்கி உள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள அம்பிளிக்கை, மண்டவாடி, தேவத்தூர், பெரியகோட்டை, காவேரியம்மாபட்டி, அரசப்பபிள்ளைபட்டி, விருப்பாச்சி, சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, பொருளூர், கள்ளிமந்தையம் உட்பட பல கிராமங்களில் கடந்த சில தினங்களுக்கு முன்பு மழை பெய்தது. இதையடுத்து விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் உழவுப் பணிகளை தொடங்கியுள்ளனர்.

அதே போல கணக்கன்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, சத்திரப்பட்டி ஆகிய கிராமங்களில் கரிசல்மண் பூமியாக இருப்பதால், மழை பெய்வதற்கு முன்பாகவே விவசாயிகள் உழவு செய்து மக்காச்சோள விதையை நட்டு வைத்து மழையை எதிர்பார்த்து உள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துப் போய் விட்டதால், இந்த ஆண்டு நிச்சயமாக நல்ல மழை பெய்யும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர். மேலும் உழவு மற்றும் விவசாய கூலிகள் கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு உயரக்கூடும் என்று விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.

**வடக்கிபாளையத்தில் பருத்தி வயல் விழா**

பொள்ளாச்சி அருகே வடக்கிபாளையத்தில் பருத்தி வயல் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கு.ராமசாமி தலைமை வகித்தார்.

வேளாண்மைத் துறை அமைச்சர் செ.தாமோதரன், சமூக நலத்துறையின் மூலம 70 பயனாளிகளுக்கு இந்த ஆண்டு ரூ.35.18 லட்சம் மதிப்பிலான திருமண உதவித்தொகை மற்றும் 4 கிராம் தங்கத்தினையும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் கோவையில் நடத்தப்பட்ட அரசுப் பொருட்காட்சியில் சிறப்பாக அரங்குகள் அமைத்த துறைகளுக்கு கேடயங்களையும் வழங்கினார். அவர் பேசியது:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், வேளாண்மைத் துறையும் இணைந்து பருத்தி விவசாயம் குறித்த புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கும் வகையில் பருத்தி வயல் விழா நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்வேறு தொழில்நுட்பங்களையும், புதிய ரகங்களையும் அறிமுகப்படுத்தி வருகிறது.

இப்போதைய காலக்கட்டத்தில் மழையளவும், பருவச் சூழ்நிலையும் மாறியுள்ளன. அவறஅறையெல்லாம் முழுமையாகத் தெரிந்து கொண்டு விவசாயம் செய்ய வேண்டும். அப்போதுதான் லாபகரமாக செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன், பொள்ளாச்சி எம்.பி. கே.சுகுமார், எம்.எல்.ஏ. எம்.கே.முத்துக்கருப்பண்ணசாமி, பொள்ளாச்சி சார் ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகதே,  வேளாண்மை இணை இயக்குநர் சு.லட்சுமிராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**9 நாள்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 5 அடி குறைந்தது**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 9 நாள்களில் 5.58 அடி குறைந்தது.

கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்பட்ட உபரி நீரில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, முழுக் கொள்ளளவை எட்டியது.

தொடர்ந்து நீர்வரத்து அதிகளவில் இருந்ததால் அணையின் நீர்மட்டம் 121.20 அடி வரை உயர்ந்தது.

கர்நாடகத்தில் மழை குறைந்ததையடுத்து, அங்குள்ள அணைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட உபரிநீரின் அளவும் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைந்தது.

இந்த நிலையில், காவிரி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. நீர்வரத்தை விட திறந்துவிடப்படும் நீரின் அளவு அதிகமாக இருந்ததால், அணையின் நீர்மட்டம் குறையத் தொடங்கியது. கடந்த 22-ஆம் தேதி 118.02 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை மாலை 112.44 அடியாகக் குறைந்தது.

கடந்த 9 நாள்களில் மட்டும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 5.58 அடி குறைந்தது.

சனிக்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 112.44 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 6,942 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

பாசனத்துக்காக நொடிக்கு 18,828 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 81.92 டி.எம்.சியாக இருந்தது.

**மானாவாரி நிலக்கடலைக்கு மானியத்துடன் காப்பீடு**

திருச்செங்கோடு வட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள மானாவாரி நிலக்கடலை பயிருக்கு மானியத்துடன் காப்பீடு அளிக்க வேளாண் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் சீ.நமச்சிவாயம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருச்செங்கோடு வட்டாரத்தில் நிகழ் காரீப் பருவத்தில் ஏமப்பள்ளி, தேவனாங்குறிச்சி, கருமாபுரம், வட்டூர் ஆகிய கிராமங்களில் நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு பயிரிடப்பட்டுள்ள மானாவாரி நிலக்கடலை பயிர்களுக்கு விவசாயிகள் மேம்படுத்திய தேசிய வேளாண்மை காப்பீடு திட்டத்தின் கீழ், ஒரு ஏக்கருக்கு ரூ. 17,968-க்கு பயிர்க்காப்பீடு செய்யலாம். இதற்கான பிரீமியத்தொகை 4.50 சதம் அரசு மானியமாக அளிக்கிறது. மீதம்

உள்ள பயிர் இன்சூரன்ஸ் தொகை ரூ. 808-யை அந்தப் பகுதி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் செலுத்த வேண்டும். பிரீமியம் செலுத்த கடைசி நாள் 30.9.2013 ஆகும்.

இதற்கான விண்ணப்பங்களை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

**நெமிலி அருகே காய்கறி சேகரிப்பு மையம்**

நெமிலி அருகே கீழ்வீதி கிராமத்தில் காய்கறி சேகரிப்பு மையத்தை வேலூர் மாவட்ட ஆட்சியர் பொ.சங்கர் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

சென்னை பெருநகர காய்கறி தேவையை பூர்த்தி செய்ய அருகில் உள்ள மாவட்டங்களில் காய்கறி உற்பத்தி விவசாயிகளை ஒருங்கிணைத்து குழு அமைத்து விளை பொருள்களை விற்பனை செய்து பலனடைய தமிழக அரசு புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இதற்காக வேலூர் மாவட்டத்தில் நெமிலி வட்டாரத்தில் கீழ்வீதி, திருமாதலம்பாக்கம், மாதனூர் அருகே சான்றோர்குப்பம், நாட்டறம்பள்ளி அருகே கொத்தூர் ஆகிய 4 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டன.

இதில் கீழ்வீதியில் அமைக்கப்பட்டுள்ள காய்கறி சேகரிப்பு மையத் துவக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் அற்புதம் தலைமை தாங்கினார்.

வேலூர் மாவட்ட ஆட்சியர் பொ.சங்கர் காய்கறி சேகரிப்பு மையத்தை திறந்து வைத்தார். நெமிலி ஒன்றியக் குழுத் தலைவர் கோமதி மணிவண்ணன், உறுப்பினர் ஆறுமுகம், கூட்டுறவுத்துறை இணைப் பதிவாளர் எஸ்.ஆர்.வெங்கடேசன், துணைப் பதிவாளர் எம்.வசந்தலட்சுமி, உதவி பதிவாளர்கள் ஈஸ்வரமூர்த்தி, குமரேசன், சிவராமன், சேகரிப்பு மைய மேற்பார்வையாளர் சந்திரசேகரன், தோட்டக் கலைத்துறை உதவி இயக்குநர் சிந்தாமணி, வேளாண் அலுவலர் சேகர், கீழ்வீதி ஊராட்சி மன்றத் தலைவர் சிவகாமிநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

விவசாயிகள் பயிரிட்ட வெண்டைக்காய், கத்தரிக்காய், பூசணிக்காய், பாகற்காய், சுரைக்காய், கீரை வகைகளை எடுத்து வந்திருந்தனர்.

கோயம்பேடு, ஒட்டன்சத்திரம் மார்க்கெட் கமிட்டிகளை அனுசரித்து விலைகளை நிர்ணயித்து கூட்டுறவுத் துறையினர் அறிவித்தனர். முதல்நாள் காய்கறிகளின் மாதிரிகளை கோயம்பேடு மார்க்கெட் கமிட்டிக்கு அனுப்பினர். அதிகாரிகள் நிர்ணயித்த விலைக்கு உள்ளூர் வியாபாரிகளே விவசாயிகளிடம் காய்கறிகளை வாங்கிக்கொண்டனர். இனி வரும் நாள்களில் சென்னை கோயம்பேடு மார்க்கெட் கமிட்டியிடம் தர ஒப்புதல் பெற்று காய்கறிகள் தினமும் கூட்டுறவுத் துறை மூலம் சென்னைக்கு அனுப்பப்படும் எனத் தெரிகிறது.

விலை கட்டுபடி ஆகவில்லையெனில் தங்களது சொந்த பொறுப்பிலும் காய்கறிகளை தேவைப்படுவோருக்கு விற்றுக்கொள்ளவும் இம் மையத்தில் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

**விளைச்சலைப் பாதிக்கும் பார்த்தீனிய செடியை அழிப்பது குறித்து வேளாண் அலுவலர் விளக்கம்**

விவசாயப் பயிரை பாதித்து விளைச்சலை சீர்குலைக்கும் பார்த்தீனிய செடியை அழிப்பது குறித்து வேளாண்மை வல்லுநர் விளக்கம் அளித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம், சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் வல்லுநர் ராஜ்கல இது குறித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பது:

விவசாயத்துக்கு கேடு விளைவிக்கும் பார்த்தீனிய செடி அதிக விதை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது, விரைவாக அதிக இடங்களில் பரவும் தன்மை கொண்டது. ஒரு செடி மூலம் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் விதைகள் வரை உற்பத்தியாகிறது.

இச்செடியை ஒரு வருடம் வளர விட்டால் 7 ஆண்டுகள் களை எடுக்க வேண்டும். மழைக்காலங்களில் இக்களை சுமார் 3 அடி உயரம் வரை பசுமையாக நன்கு வளரக் கூடியது. பயிர் செய்யும் இடங்களில் களைச் செடிகள் பரவினால் மகசூலில் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும். இவற்றின் விதைகள் காற்றின் மூலம் வேகமாக பரவக்கூடியது. எனவே இச்செடியின் மகரந்தத் தூள்களை மனிதர்கள் நுகர்வதால் சருமநோய், தொழு நோய், ஆஸ்துமா, ஒவ்வாமை போன்ற நோய்கள்

ஏற்படும். கால்நடைகளுக்கு காய்ச்சல், அரிப்பு, குடற்புண், வாய்ப்புண் போன்றவை ஏற்படும். பார்த்தீனின் என்ற நச்சுப் பொருளால் தான் இந்நோய்கள் ஏற்படுகிறது.

இச்செடியை ஒருங்கிணைந்த களை மேலாண்மை உழவியல் முறையில் அழிப்பதற்கு மண்ணிலிருந்து தோன்றியவுடன், கையால் பிடுங்கி அழித்தல் வேண்டும். பயிர் சுழற்சி முறையை கடைப்பிடித்து இக்களை செடியினால் பாதிக்கப்பட்ட நிலங்களில் செண்டுப்பூக்களை மழைக் காலங்களில் சாகுபடி செய்ய வேண்டும்.

பார்த்தீனீய செடியிலுள்ள விதைகள் விதை வங்கியாக செயல்படுவதால் இதனை மக்க வைத்து அதிக வெப்பத்தின் மூலம் அழிக்கலாம். இச்செடியை புல் வெட்டும் கருவியைக் கொண்டு சிறு சிறு துண்டுகளாக வெட்டி தரையில் விரித்து, (10 செ.மீ. பருமனுக்கு) விடவும். இதன் மேல் டிரைகோ டெர்மா விரிடி மற்றும் யூரியா கரைசல் 5 கிராம் லிட்டர் தண்ணீர் அல்லது ஒரு டன் களைக்கு 5 கிலோ யூரியாவினைப் பயன்படுத்தி மக்க வைக்கலாம்.

இந்த அடுக்கு முறையை 3 அடி உயரம் வரை பின்பற்ற வேண்டும். பின்னர் செம்மண் அல்லது களிமண் ஆகியவற்றைக் கொண்டு படுக்கையின் மீது பூச வேண்டும். 50 சதம் ஈரப்பதம் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும், 2 வாரங்களுக்கு நன்கு மேலும் கீழுமாக கலக்கிட வேண்டும். 45 நாள்களில் களைச் செடிகள் மக்கி விடும். பின்னர் அவற்றை உரமாக நிலங்களில் இடலாம்.

பயிர் சாகுபடி செய்யாத இடங்களில் பார்த்தீனீய செடியைக் கட்டுப்படுத்த சமையல் உப்பு (200 கிராம் லிட்டர் தண்ணீர்) ஒட்டுப்பசை அல்லது காதி சோப்பு கலந்து தெளிக்கலாம். பயிர் சாகுபடி செய்யும் இடங்களில் களை முளைப்பதற்கு முன்பு அட்ரசின் (2.5 கிலோ) களைக்கொல்லி மருந்தை தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு மேற்கண்ட முறைகளில் பார்த்தீனீய களைச் செடியை அழித்து விவசாயிகள் பயன் பெறலாம் மேலும் விபரங்களுக்கு சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்று அச்செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**02.09.2013**

## கொடைக்கானலில் தொடர்மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு.

கொடைக்கானல் : கொடைக்கானலில் கடந்த சில நாட்களாக தொடர் மழை நீடிக்கிறது.

நகருக்கு குடிநீர் வழங்கும் பழைய நீர்த்தேக்கத்தில் நேற்றைய நிலவரப்படி 8.5 அடியாக (மொத்த உயரம் 20 அடி) இருந்தது. மனோரத்தினம் சோலை அணையில், நீர்மட்டம் 10.5 அடியாக உயர்ந்தது. (மொத்த உயரம் 36 அடி). பழைய நீர்த்தேக்கத்தில் மழைக்கு முன் 2.5 அடியாகவும், மனோரத்தினம் சோலை அணையில் நீரின்றியும் இருந்தது.

நகராட்சித் தலைவர்(பொறுப்பு) எட்வர்ட் கூறுகையில், ""போதிய மழை இன்மை காரணமாககடந்த சில மாதங்களாக குடிநீர் தட்டுப்பாடு இருந்து வந்தது. புதிதாக 10 ஆழ்துளை கிணறுகள், அமைக்கப்பட்டன. தற்போதைய மழையால், வறண்டு கிடந்த அணைகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இனி வாரம் ஒருமுறை குடிநீர் சப்ளை செய்ய முடியும் என நம்புகிறோம்," என்றார்...

## தாண்டிக்குடியில் 67.மி.மீ., மழை

தாண்டிக்குடி : தாண்டிக்குடியில் ஒரே நாளில் வெளுத்து வாங்கிய மழைக்கு விவசாயம் பாதித்தது.

நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு தொடங்கிய மழை இரவு 11 மணி வரை நீடித்தது. சூறாவாளி காற்று மற்றும் ஆலங்கட்டியுடன் கன மழை பெய்தது. வாழை, முருங்கை பீன்ஸ், சவ்சவ் பந்தல்கள் சேதமாகின.

சில இடங்களில் முருங்கை பீன்ஸ், பட்டர் பீன்ஸ், அவரை பயிர்களை மழை நீர் சூழ்ந்தது. கனமழை காரணமாக பூ, பிஞ்சுகள் உதிர்ந்து பாதிப்பு ஏற்பட்டது.

கடந்த ஓராண்டுக்கு மேலாக வறண்டு கிடந்த மருதாநதி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய நிலையில் அணைக்கு நீர்வரத்து செல்லும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

விவசாயி ஆண்டி கூறுகையில்: பறிக்கும் தருவாயில் இருந்த முருங்கை பீன்ஸ் பந்தல் மழைக்கு சாய்ந்து மகசூல் இழப்பை ஏற்படுத்தியுள்ளது,"என்றார்.

தாண்டிக்குடியில் மட்டும் 67 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

## வாழை இலையில் டீ கப், பிளேட் வத்திராயிருப்பு மாணவர் சாதனை

ஸ்ரீவில்லிபுத்தூர் : வத்திராயிருப்பு இந்துமேல்நிலைப் பள்ளி பிளஸ் 1 மாணவர்டேனித் ஆதித்யா, பிளாஸ்டிக் பொருட்களால் நில வளம் மாசுபடுவதை தடுக்கும் விதமாக, வாழை இலையில் டீ கப், தட்டு, கவர் போன்றவைகளை தயாரித்து, ஸ்ரீவில்லிபுத்தூர் வி.பி.எம்.எம். பெண்கள் இன்ஜினியரிங் கல்லூரி அறிவியல் கண்காட்சியில்,காட்சி பொருளாக வைத்துள்ளார்.

வாழை இலை பறித்த இரண்டே நாளில் வாடிவிடும். ஆனால் இவர், இலையை பதப்படுத்தி, எப்போது வேண்டுமானலும் பயன்படுத்துவதற்கு, பேப்பர் பிளேட், கப், பிளாஸ்டிக் கப் மாற்றாக, தயாரித்து உள்ளார்.

மாணவர் டெனித் ஆதித்யா,"" டீக்கடை முதல் ஓட்டல்கள் வரை, உணவுகள் தரும் போது, பிளாஸ்டிக் பிளேட், பிளாஸ்டிக் டீ கப், அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இதனால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. சில இடங்களில், பேப்பர் பிளேட், கப்களை பயன்படுத்துகின்றனர். பேப்பர்களுக்காக மரங்களும் வெட்டப்படுகிறது. இதனால் வன வளங்கள் பாதிக்கப்படுகின்றனர். இவைகளிலிருந்து விடுபட வாழை இலையை கெடாமல் பல ஆண்டுகள் வைத்திருந்து பயன்படுத்தும் வகையில் டீ கப், பிளேட் தயாரிக்க முடிவு செய்தேன். இலையின் உட்சுவர் செல்களால் ஆனது. அவை மிகவும் லேசானதாக இருக்கும். நான் அவற்றை பதப்படுத்தி கடினத்தன்மையாக மாற்றம் செய்தேன். அதன் பின் அவற்றை பல ஆண்டுகள் பயன்படுத்தும் வகையில் பச்சை நிற இலையாகவும், டீ கப், பிளேட், போஸ்டல் கவராகவும் மாற்றினேன். பொதுவாக வாழைஇலைகள்

மூன்று நாட்களில் வாடி பயன்படுத்த முடியாத நிலைக்கு மாறி விடும். இந்த இலைகள் பல ஆண்டுகள்
பயன்படும் விதத்தில் இருக்கும். சாதாரண இலைகள் 36 டிகிரி வெப்பத்தை மட்டுமே தாங்கும். இந்த இலைகள் 222 டிகிரி செல்சியஸ் வெப்பத்தை தாங்கும். சாதரண இலைகள் மைனஸ் 12 டிகிரிக்கு மேல் குளிர்ச்சியை தாங்காது. இவ்வலைகள் மைனஸ் 30 டிகிரி குளரையும் தமண்டல பூஜை விழா ாங்கும். இதன் உற்பத்தி செலவும் மிகவும் குறைவு. இதை பயன்படுத்தியபின் ஆடு, மாடுகளுக்கு உணவாக கொடுக்கலாம். நான்கு வாரத்தில் மக்கி உரமாகிவிடும். இந்த இலை பொருள்களை பயன்படுத்துவதன் மூலம், உலகின் 59 சதவீத பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு குறையும். 18 சதவீத பேப்பர் பயன்பாடும் குறையும். இதை உபயோகித்த பின், கழிவுகளை மிருகங்கள் உணவாக உட்கொள்ளலாம், உரமாகவும் பயன்படுத்திக்கொள்ளலாம்," என்றார். மாணவர் டெனித் ஆதித்யா,
2010ல் தொடர்ந்து இயக்ககூடிய "பவர்மைன்ட்' உள்ளிட்ட 6 சாப்ட்வேர்களை உருவாக்கி, மாநில அரசின் பல்வேறு விருதுகளை பெற்றவர், என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகத்தில் மண்புழுக்களில் 3000 வகைகள்

உலகத்தில் மண்புழுக்களில் 3000 வகைகள் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் இந்தியாவில் 384 வகைகள் உள்ளது. 6 வகையான மண் புழுக்கள் உரம் தயாரிக்க உகந்தவைகளாக பயன்படுத்தி உரம் தயாரிக்கப்படுகிறது. தற்பொழுது விவசாயிகள் விவசாயத்திற்கு மாட்டு சா ணங்கள், பசுந்தாள்பயிர் உரங்கள் பயன்படுத்துவதையும் குறைத்து விட்டார்கள். காரணம் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்த நிலையில் இருப்பதால் மேலும் தற்பொழுது விவசாயிகள் இரசாயண உரங்களை மட்டும் பயன்படுத்தி விவசாயம் செய்யும் எண்ணத்தில் உள்ளார்கள். இதனால் மண்ணில் நன்மை தரும் நுண்ணுயிரியின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனால் மண்ணில் உள்ள சத்துக்கள் பயிர்களுக்கு கிட்டா நிலை ஏற்படுகிறது. இதனால் மகசூல் பெருமளவில் பாதிப்படைகிறது. இதனை

சரி செய்து மகசூலை பெருக்கவும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு உணவு உற்பத்தியை பெருக்கவும் இயற்கை உரத்தை அதிகமாக பயன்படுத்தவும், நச்சு தன்மையற்ற உணவை மக்களுக்கு கொடுக்க, விவசாயிகள் மண்புழு உரங்கள் விவசாயத்தில் பயன்படுத்த வேண்டும். இந்த உரம் உற்பத்தி செய்ய வேளாண்மை துறை வழியாக பயிற்சி கொடுக்கப்படுகிறது.

மண் உரமும்..பயன்களும்

மண்புழு உரம் இடுவதால் மண்துகள்கள் ஒன்றாக இணைந்து ஒட்டிக் கொள்வதால் குருணை போன்ற கட்டிகள் உருவாகி மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகிறது. இதனால் மண்ணின் காற்றோட்டம் மற்றும் நீர்ப்பிடிப்புத்திறன் மேம்படுத்தப்படுகிறது. களிமண்பாங்கான மண்ணில் குழம்பு தன்மை குறைக்கின்றது. மண் அரிப்பை குறைக்க உதவுகிறது. கோடை காலத்தில் மண்ணின் வெப்பநிலையை குறைக்கிறது. இதனால் வேர் காயம் ஏற்படுவது குறைகிறது. இதனால் கோடையிலும் பயிர்கள் நல்ல மகசூல் கொடுக்க வாய்ப்புள்ளது. இதனால் வாழை, தென்னை, கரும்பு, பழபயிர்கள் குறிப்பாக எலுமிச்சை, சப்போட்டா, கொய்யா, மா போன்ற பழபயிர்கள் கோடையில் முழுமையாக பாதுகாக்க மண்புழு உரம் பெரிதும் பயன்படுகிறது. மேலும் மழைக் காலங்களில் மண்ணை வெப்பமாக வைத்திருக்கவும் உதவுகிறது. இதனால் சத்துகளை எடுக்கும் புது வேர்கள் உருவாக மண்புழு உரம் பயன்படுகிறது. இதனால் பயிர்கள் நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

மண்வள மேம்பாடு

மண்புழு உரத்தினால் ஏற்படும் அமிலமும் கார்பன்டைஆக்சைடு வாயுவும் மண்ணின் காரத்தன்மையை குறைத்து உரப்பிடிப்பு திறனை மேம்படுத்துகிறது. மண்ணில் உள்ள கரையாத தாதுக்களை கரையச் செய்து தாவங்களுக்கு கிடைக்கக் கூடிய ஊட்டச்சத்தாக மாற்றுகிறது. மண்ணிற்கு பேரூட்ட சத்துக்கள் அளிப்பதுடன் தாவரங்களுக்கு தேவைப்படும் அனைத்து வகை நுண்ணூட்டச் சத்துக்களையும் சீரான அளவில் வழங்குகிறது. மண்ணில் உள்ள தீங்கு விளைவிக்கக்கூடிய கன உலோகங்களை தற்காலிகமாக ஈர்த்து வைத்து கொள்வதால் தூய்மையான நிலத்தடி நீர் பயிர்களுக்கான ஊட்டச் சத்துக்களையும் ஆற்றலையும் அளித்து மண்வளம் மேம்பாட்டிற்கு வித்துடுகிறது. மண்ணில் நீர்பிடிப்பு தன்மை அதிகரிப்பதால் பயிர் கோடையிலும், நல்ல முறையில் பாதுகாக்கப்படுகிறது.

விவசாயிகளின் உற்ற நண்பன் மண்புழுக்களை விவசாயிகளின் நண்பன், அரிஸ்டாட்டில் காலம் முதலே மண்புழுவை மண்ணின் குடல் என்று அழைத்துள்ளார்கள். காரணம் மண்புழு மண்ணை தன் குடலினுள் எடுத்து பின் அவற்றை வெளியேற்றுகிறது. நைல் மற்றும் சிந்து வெளி பள்ளத்தாக்கில் உள்ள அனைத்து வளமிக்க நகரங்களிலும் மண்புழுக்களை கொண்டு வளமிக்கதாக மாற்றப்பட்டவையே இப்படி எத்தனையோ வரலாற்றை கூறிக்கொண்டே போகலாம்.

சத்துகளின் விவரம்

மண்புழு உரத்தில் காணப்படும் சத்துகள் மண்புழு உரத்தில் அதிகப்படியாக அங்கக கரிமம் 20-25 சதம் உள்ளது. இது மண்ணின் வளத்தை மேம்படுத்தி பயிருக்கு தேவையான சத்துப் பொருட்களை தேவையான நேரத்தில் தேவையான அளவு கொடுக்கிறது. இதனால் மகசூல் அதிகரிக்கிறது. மேலும் தழைச்சத்து 1.5 முதல் 2.0 சதம், மணிச்சத்து 0.5 முதல் 1.5 சதம், சாம்பல் சத்து 0.5 முதல் 1.0 சதம் சுண்ணாம்பு சத்து, 0.4 முதல் 0.8 சதம் மெக்னீசியம், 0.3 முதல் 0.6 சதம், சல்பர் 100 முதல் 500 பிபிஎம், இரும்பு சத்து 6.7 முதல் 9.3 பிபிஎம், காப்பர் 2.0 முதல் 9.5 பிபிஎம், சிங் 5.7 முதல் 11.5 பிபிஎம்.

கூடுதலாகும் மகசூல் தரம்

மண்புகு உரங்கள் இடுவதால் மகசூல் தரம் அதிகரிக்கப்படுகிறது. குறிப்பாக பழங்களின் நிறம், ருசி, மணம், பழங்கள் சேமித்து வைக்கும் காலம் அதிகரிக்கிறது. இதை போன்று பூக்கள், காய், கறிகள், தானியங்கள், நல்ல விலைக்கு விற்பனை செய்ய வழி வகுக்கிறது. ரசாயண உரங்கள் தேவைக்கு அதிகமாக பயன்படுத்துவதால் மண்ணின் இயற்கை தன்மை கெட்டு விடுகிறது.

ஆனால் மண்புழு உரம் மண்ணில் இடுவதால் மண்வளம் இயற்கையாக பாதுகாக்கப்பட்டு, பயிர்களுக்கு வளர்ச்சி ஊக்கியாகவும் செயல்படுகிறது. பூச்சி நோய் தாக்குதலை வெகுவாக குறைக்க உதவுகிறது. நச்சுதன்மை இல்லாத உணவை உற்பத்தி செய்ய மிகவும் உதவுகிறது. மண்புழு உரம் பயன்படுத்துவதால் மண்ணில் உப்பின் கடத்தும் திறனை அதிகரித்து கார அமில தன்மையை சீர்படுத்துகிறது. இதனால் பயிர் நல்ல முறையில் தன்னுடைய வளர்ச்சி பருவம்,

பூக்கும் பருவம், முதிர்ச்சி பருவத்தை சரியான காலத்தில் ஏற்படுத்தி மகசூலை அதிகரிக்க செய்கிறது. மண்புழு உரத்தில் பயிருக்கு தேவையான இயற்கையான வளர்ச்சி ஊக்கிகள் காணப்படுகின்றது. குறிப்பாக ஆக்ஸின், சிஸ்டோஹைனின், இது பயிரை வளரச் செய்கிறது. ஜிபிரிலின் இது பயிரை பூக்கச் செய்கிறது. மேலும் மண்புழு உரத்தில் அதிகப்படியாக கியூமிக் அமிலம் காணப்படுகிறது.
இது பயிருக்கு வேர் வளர்ச்சியை ஏற்படுத்தும். இதனால் பயிருக்கு தேவையான உரங்கள் மண்ணில் இருந்து எடுக்க உதவுகிறது. இதுதான் சீராக வளர உதவுகிறது. மண்புழு உரம் இடுவதால் மக்காச்சோளம், கம்பு, சோளம், பருத்தி, சிறுதானிய பயிர்கள் மிகவும் பயன்பெற்று மகசூல் அதிகரித்து வறட்சியை தாங்கி வளர வாய்ப்புள்ளது.

## யானைகளின் விருப்ப உணவு பயிரிடுவதை தடுக்க வேண்டும் வனத்துறை விழிப்புணர்வு முகாமில் அறிவுரை

கூடலூர்:"கூடலூர் பகுதியில் வனத்தை ஒட்டிய குடியிருப்பு அருகே, யானைகளின் விருப்ப உணவு பயிரிடுவதை தடுப்பதன் மூலம், மனித-யானைகள் மோதலை தடுக்க முடியும்' என, வனத்துறையினர் தெரிவித்தனர்.

கூடலூர் ஓவேலி வனத்துறை சார்பில், சீபூரத்தில் மனித -வன விலங்குகள் மோதலை தடுப்பது குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது. வனகாப்பாளர் ராஜேஷ்குமார் வரவேற்றார்.
முகாமுக்கு வனச் சரகர் முத்துசாமி (பொ.,)பேசுகையில், ""யானை உள்ளிட்ட வன விலங்குகளிலிருந்து நம்மை பாதுகாத்து கொள்ள நாம் முன்னெச் சரிக்கையாக இருக்க வேண்டும். அதற்கு வீடுகள் அருகே, யானைகள் விருப்ப உணவு பயிர்களை பயிரிடுவதை தவிர்க்க வேண்டும்.
இரவில் நடந்து செல்லும் போது டார்ச் லைட் பயன்படுத்த வேண்டும். இரவில் குடித்து விட்டு, வாசனை திரவியங்கள் பயன்படுத்தி, நடந்து செல்வதை தவிர்க்க வேண்டும்.
யானைகளை குடியிருப்புக்கு வந்தால் பொதுமக்கள் வனத்துறைக்கு தகவல் தெரிவித்து, அதனை விரட்ட ஒத்துழைக்க வேண்டும்," என்றார்.

முகாமில், நியூஹோப் எஸ்.எஸ்.ஐ., சிவாஜி, ஒவேலி பேரூராட்சி கவுன்சிலர்கள் குஞ்சுமுகமது, காளித் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தாட்கோ மூலம் கடன் உதவி கேட்டு 1,200 பேர்...காத்திருப்பு! இடைத்தரகர்களை தடுக்க இணையத்தில் விண்ணப்பம்

காஞ்சிபுரம்:தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர்கள், 1,200 பேர், சுய தொழில் துவங்க, தாட்கோ நிறுவனத்தில், நிதியுதவி கேட்டு, விண்ணப்பித்து காத்திருக்கின்றனர். இடைத்தரகர்களை ஒழிக்கும் விதமாக, இந்த ஆண்டு, இணையதளத்தில் விண்ணப்பிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள், சுயதொழில் மற்றும் விவசாயம் செய்து முன்னேற வசதியாக, தமிழக அரசு தாட்கோ நிறுவனம் மூலம், கடன் உதவி வழங்குகிறது. சொந்தமாக நிலம் வாங்குதல், இருக்கும் நிலத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றிக்கு, நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்கு அரசு மானியமும் உண்டு. தொழில் முனைவோருக்கு, கடன் தொகையில், 30 சதவீதம் அல்லது, 2.25 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

இளைஞர்களுக்கு...

இத்திட்டத்தின் கீழ், 18 வயது முதல், 35 வயது வரை உள்ள இளைஞர்களுக்கு, சுய வேலைவாய்ப்பு அளிக்ககூடிய சித்த மருத்துவர் மற்றும் பல் மருத்துவர்கள், மருத்துவ சிகிச்சை மையம் துவங்குதல்; ஆட்டோ, கார், வேன் ஆகிய வாகனங்களை வாங்கி அதன் மூலம் வருவாய் ஈட்டுதல்; மளிகைக்கடை, வாட்டர் சர்வீஸ் வைத்தல் போன்ற தொழில்களை துவங்கலாம். குறிப்பிட்ட துறையில், கல்வித்தகுதி பெற்றுள்ளவர்கள், அந்தந்த துறையில் முன்னேற கடன் பெறலாம்.

நல நிதி திட்டம்

இத்திட்டத்தில், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டோர், கொத்தடிமையாக இருந்து விடுவிக்கப்பட்டவர்களும், முன்னு-

ரிமை அடிப்படையில் கடன் பெறலாம்.

இடைத்தரகர்கள்

தாட்கோ நிறுவனத்தில், கடன் உதவி பெற்றுத் தருவதாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஒரு கும்பல் இடைத்தரகர்களாக செயல்பட்டு, விண்ணப்பங்களை கட்டுக் கட்டாக கொடுப்பதாக, புகார் எழுந்துள்ளது. பயனாளிகளை, நேர்காணல் மூலம் அதிகாரிகள் தேர்வு செய்வதைக் கண்காணித்து, இடைத்தரகர்கள், குறிப்பிட்ட பணத்தை கமிஷனாக பெறுவதாகவும் புகார் எழுந்துள்ளது. அதிகாரிகளுக்கு சேர-வேண்டிய கமிஷனை, இடைத்தரகர்களே, பயனாளிகளிடம் இருந்து பெற்று தருவ-தாகவும் கூறப்படுகிறது. ஆனால், அதிகாரிகள் இதை மறுக்கின்றனர்.

தாட்கோ அதிகாரி ஒருவர் கூறியதாவது:

இடைத்தரகர்களின் தலையீட்டை தடுக்க, இணையதளத்தில் விண்ணப்பிக்கும் முறையை, காஞ்சிபுரம் மாவட்டத்தில், அறிமுகம் செய்துள்ேளாம். இந்த ஆண்டு, விண்ணப்பித்துள்ளவர்கள் விவரங்களை, சரிபார்த்து வருகிறோம். இடைத்தர-கர்கள் தலையீட்டை முற்றாக தடுக்கும் வகையில், இந்த நடவடிக்கை எடுக்கப்-பட்டு உள்ளது.

இவ்வாறு, அதிகாரி கூறினார்.

காத்திருப்பு

காஞ்சிபுரம் மாவட்ட தாட்கோ அலுவலகத்தில், இந்த ஆண்டில் கடன் உதவி பெற, விண்ணப்பித்துள்ளோர் விவரம்:

தொழில் முனைவோர் கடன் பெற, 585 பேர்.

இளைஞர் சுய தொழில் துவங்க, 414 பேர்.

நல நிதி பெற, 51 பேர்.

மகளிர் சுய உதவி குழுக்கள், சுழல் நிதி மானியம் பெற, 25 பேர்.

பொருளாதார கடன் உதவி பெற, 127 பேர்

மொத்தம், 1,202 பேர், இணையதளம் மூலம் விண்ணப்பித்து காத்திருக்கின்றனர்.

கலெக்டர் அறிவுரை

ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்படி, தாட்கோ மூலம், 10 லட்சம் ரூபாய் வரை வழங்கும் கடன்களுக்கு, துணை பிணையம், காப்பு வைப்பு இல்லாமல், வங்கிகள் கடன் வழங்க வேண்டும் என, காஞ்சிபுரம் கலெக்டர், வங்கி அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். பயனாளிகள் தேர்வு செய்வதிலும், அதிகாரிகள், இடைத்-தரகர்களின் தலையீட்டை தடுப்பதிலும், அதிகாரிகள் தீவிரம் காட்டுகின்றனர்.

### காய்கனிகள் விற்பனை துவக்கம்

வேலூர்: காய்கனிகள் விற்பனையை கலெக்டர் தொடங்கி வைத்தார்.
வேலூர் மாவட்டம் நெமிலியில் தோட்டக் கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் சார்பில் பெருநகர காய்கனி தொகுப்பு திட்டத்தின் கீழ் நடந்த காய்கனிகள் சேமிப்பு மைய திறப்பு விழா நேற்று (செப்.,1 ) நடந்தது.

கலெக்டர் சங்கர், காய்கனிகள் விற்பனையை துவங்கி வைத்தார். விழாவில் தோட்டக் கலை துணை இயக்குனர் அற்புதம், நெமிலி யூனியன் சேர்மன் கோமதி மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சாமந்திப்பூ சாகுபடி செய்து லாபம் ஈட்டும் விவசாயிகள்

ரிஷிவந்தியம்:ரிஷிவந்தியம் பகுதியில் சாமந்தி பூக்களை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

தோட்டப்பயிர்களில் சாமந்தி, கோழிக்கொண்டை பூ, சம்பங்கி, கனகாம்பரம் உள்ளிட்ட பூக்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பராமரிப்பு செலவு குறைவாக இருந்தும், குறைந்த பரப்பில் மட்டுமே பயிரிடுகின்றனர்.

ரிஷிவந்தியத்தை சேர்ந்த சிலர் சாமந்தி பூச்செடிகளை பயிரிட்டுள்ளனர். தற்போது பெய்த மழையும் செடிகளுக்கு நல்ல ஊட்டத்தை கொடுத்துள்ளதால் அதிக பூக்கள் பூத்துள்ளது.

சாமந்திப்பூ பயிரிட முத லில் விதைகளில் இருந்து நாற்று வளர்க்கப்படுகிறது. பின்னர் 20 நாட்களில் நடவு செய்கின் றனர். நீர்பாய்ச்சி பராமரிக்கின்றனர். செடிகள் வளர்ந்து 50 நாளுக்கு பின் பூக்கள் பூக்கத் துவங்கும். அவற்றை தினம்

பறித்து விற்பனைக்கு அனுப்புகின்றனர். விநாயகர் சதுர்த்தி விழா துவங்கவுள்ளதால் நல்ல விலைக்கு விற்பனையாகும்.

### சொட்டு நீர் பாசனத்தில் கரும்பு சாகுபடி பயிற்சி

செஞ்சி:செஞ்சி தாலுகா செம்மேடு ராஜ்ஸ்ரீ
சர்க்கரை ஆலை சார்பில் நாகலாம்பட்டு கிராமத்தில் கரும்பு சாகுபடியில் சொட்டு நீர் பாசன முறை குறித்த பயிர்ச்சி முகாம் நடந்தது.
சர்க்கரை ஆலை உப தலைவர் கிருஷ்ணன் தலைமை தாங்கினார். துணை பொது மேலாளர் (கரும்பு) விஜயகுமார் சிறப்புரை நிகழ்த்தினார்.

உழவியல் முறை, அகலகால் கொண்டு சொட்டு நீர் பாசனம் அமைத்தல்,

இயந்திரத்தின் பயன் பாட்டை அதிகரித்தல், பரு செதில் நாற்று கொண்டு கரும்பு நடவு செய்தல் குறித்து துணை பொது மேலாளர் (விரிவாக்கம்) லட்சுமணன் விளக்கினார்.
கரும்பு உதவி மேலாளர் சிவசண்முகம் நன்றி கூறினார். முகாம் ஏற்பாடுகளை களப்பணியாளர்கள் சுந்தரம், சரவணன் செய்தனர். முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

### பருவம் தவறிய மழையால்...பலனில்லை! கை கொடுக்காத ஆடிப்பட்டம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், ஆடிப்பட்டத்துக்கு மழை கை கொடுக்காத நிலையில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் விவசாய பணிக்கு பயன் இல்லாமல் போனது. தற்போதைய மழையால் வறண்ட நிலம் ஈரமடைந்ததை தவிர விவசாயிகளுக்கு எந்த பலனும் இல்லாமல் போனது.
விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை ஆண்டுக்கு சராசரி, 393.4, வடகிழக்கு பருவமழை 330.1 மி.மீ., பெய்யும்.
பருவமழையை அடிப்படையாக கொண்டு தர்மபுரி மாவட்ட நீர் ஆதாரங்களில் நீர் சேமிக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் விவசாயம் சுழற்சி முறையில் செய்யப்பட்டு வருகிறது. மேட்டுப்பாங்கான நிலங்கள் அதிகம் உள்ள நிலையில், மானாவாரியில் பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.
மாவட்டத்தில், நெல், 27,067 ஹெக்டேரும், கரும்பு, 20,324, நிலக்கடலை, 17,069,

சூரியகாந்தி, 537, பருத்தி, 11,027, மற்ற பயிர்கள் 43,372 ஹெக்டேரில் பயிர் செய்யப்படகிறது. இது தவிர தோட்டக்கலை பயிர்களும், மலர் சாகுபடியும் அமோகமாக நடந்து வருகிறது.

கடந்த, 2005ம் ஆண்டுக்கு பின் தர்மபுரி மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவுக்கு பருவமழையில்லை. கடந்தாண்டில், 40 சதவீதம் பருவமழை ஏமாற்றியது.

இந்தாண்டும் தென்மேற்கு பருவமழை கைகொடுக்காத நிலையில், ஆடிப்பட்டம் விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

ஆடிப்பட்டத்துக்கு வசதியாக ஜூலை இறுதியில் மழை வரும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடம் இருந்தது. அதற்கேற்ப விவசாய நிலங்களை தயார் செய்து வைத்திருந்தனர். ஆனால், ஜூலை இறுதி வாரம் முதல் கடந்த, 28ம் தேதி வரையில், மாவட்டத்தில் மழையில்லாமல் போனது.

தொடர் மழையின்மை காரணமாக நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்து, இறவை பாசன பகுதி சாகுபடியும் கேள்விக்குறியாகி விட்டது. ஆண்டுதோறும் ஆடிப்பட்டத்தில், சிறு தானிய பயிறு வகை பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும்.

இந்தாண்டு, 60 சதவீதம் சிறு தானிய பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

மழையை எதிர்பார்த்து, 40 சதவீத விவசாயிகள் சாகுபடி செய்த நிலையில், கடந்த சில நாட்களாக பெய்யும் மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை கொடுத்த போதும், தொடர்ந்து மழை தேவையுள்ளது.

தற்போதைய மழையால், ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் கருகி வந்த பயிர்களுக்கு உயிர் கொடுத்துள்ளது. தொடர்ந்து வடகிழக்கு பருவமழை கை கொடுக்கும் பட்சத்தில், ஆடிப்பட்ட பயிர்கள் தப்பும் வாய்ப்புகள் உள்ளது.

இரண்டு நாட்கள் பரவலாக கன மழை பெய்த போதும், கோடை காலத்தை மிஞ்சும் வகையில் வெயில் வாட்டி எடுக்க துவங்கியிருப்பது, விவசாயிகளுக்கு கவலையை கொடுத்துள்ளது. தற்போதைய மழையால், விவசாய பணிக்கு பெரும் உதவி என

சொல்ல முடியாது என்ற போதும், கருகி வந்த பயிர்கள் உயிர் பெறுவதற்கு இந்த மழை உதவியாக இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் மாட்டிறைச்சி முன்னிலை:பாசுமதி அரிசியுடன் போட்டி போடுகிறது

நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், முதல் மூன்று இடங்களில், மாட்டிறைச்சி இடம் பிடித்துள்ளது. இது, ஏற்றுமதியில், பாசுமதி அரிசிக்கு கடும் போட்டியாக உருவெடுத்து வருகிறது.இந்தியாவின் மாட்டிறைச்சி ஏற்றுமதி, கடந்த 10 ஆண்டுகளாக, ஆண்டுக்கு, 15 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது.பங்களிப்பு:கடந்த 2012-13ம் நிதியாண்டில், இந்தியா, 320 கோடி டாலர் மதிப்பிலான, 11.06 லட்சம் டன் மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்து, சர்வதேச சந்தையில், 50 சதவீத பங்களிப்புடன் முன்னேறியுள்ளது.

இது, 2011-12 மற்றும் 2010-11ம் நிதியாண்டுகளில், முறையே 286 கோடி டாலர் (9.85 லட்சம் டன்) மற்றும் 188 கோடி டாலர் (72.62 லட்சம் டன்) ஆக இருந்தது.நடப்பு நிதியாண்டில், ஏப்ரல் - மே மாதங்களில், 57.80 கோடி டாலர் மதிப்பிலான மாட்டுஇறைச்சி ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது. இதே வேகத்தில் ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டால், நடப்பு நிதியாண்டில், பாசுமதி அரிசியை விஞ்சி, முதலிடத்தை பிடிக்கவும் வாய்ப்புள்ளது.

இந்தியாவில் இருந்து வியட்னாம், மலேசியா, எகிப்து, சவுதி அரேபியா, பிலிப்பைன்ஸ் ஆகிய ஐந்து நாடுகளுக்கு, அதிக அளவில் மாட்டிறைச்சி ஏற்றுமதி ஆகிறது. இறைச்சிக்காக கொல்லப்படும் மாடுகளின் தோல், பல்வேறு பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது.மாட்டிறைச்சி விற்பனையில் முன்னணியில் உள்ள பிரேசில் நாடு, ஏற்றுமதி தொடர்பான பிரச்னைகளை சந்தித்து வருகிறது.

இது, இந்தியாவிற்கு சாதகமாக உள்ளது. இத்துடன், சீனாவில் மாட்டிறைச்சிக்கான தேவை அதிகரித்து வருவதும், இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு சிறப்பான வர்த்தக வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.பிரேசில்:சென்ற நிதியாண்டில், இந்திய நிறுவனங்கள், ஒரு டன் மாட்டிறைச்சியை, சராசரியாக,

2,900 டாலர் என்ற விலையில் ஏற்றுமதி செய்தனர். இது, தற்போது, 3,500 டாலராக அதிகரித்துள்ளது. பிரேசிலின் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள தொய்வு, சீனாவில் தேவை அதிகரித்து வருவது போன்றவை, இந்திய மாட்டிறைச்சி ஏற்றுமதியாளர்களுக்கு கொழுத்த வர்த்தகத்தை வழங்கியுள்ளது.இந்தியாவில், மாட்டிறைச்சி ஏற்றுமதியில், 146 ஆண்டுகள் பழமையான, மும்பையை சேர்ந்த, அல்லானா சன்ஸ் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. இந்நிறுவனம், காப்பி ஏற்றுமதியிலும் முதலிடத்தில் உள்ளது.

சென்ற நிதியாண்டில் இந்நிறுவனத்தின், 22,500 கோடி டாலர் ஏற்றுமதியில், மாட்டுஇறைச்சியின் பங்களிப்பு, 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.இந்தியாவில், மாட்டிறைச்சிக்கும், பதப்படுத்தும் பணிகளுக்குமாக, 42 கசாப்பு களங்கள் உள்ளன. இவற்றில், ஏற்றுமதி ஒழுங்குமுறை ஆணையத்தின் (அபிடா) அங்கீகாரம் பெற்ற, அதிநவீன பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட, கசாப்பு களங்களின் எண்ணிக்கை, 32 ஆக உள்ளது. இத்துறையில், நேரடியாக, 74 ஆயிரம் பேரும், மறைமுகமாக, 1.50 லட்சம் பேரும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

பால் உற்பத்தி:கடந்த 2007ம் ஆண்டு, கால்நடை கணக்கெடுப்பின் படி, இந்தியாவில், 10.53 கோடி மாடுகள் உள்ளன. இது, உலகின் ஒட்டு மொத்த இறைச்சி மாடுகளின் எண்ணிக்கையில், 50 சதவீதமாகும்.இனவிருத்திக்கு உதவாத, இறைச்சி மாடுகளின் எண்ணிக்கை குறைந்து, கறவை மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், இந்தியா, பால் உற்பத்தியில் முதலிடத்திற்கு முன்னேறி உள்ளது.பஞ்சாப், ஐதராபாத், அலிகார், அவுரங்காபாத், உத்தர பிரதேசம், ஆகிய மாநிலங்களில் இருந்து அதிக அளவில், மாடுகளும், அவற்றின் இறைச்சியும் கொள்முதல் செய்யப்படுகின்றன.இந்தியாவில் இருந்து, ஆண்டுக்கு, 500 கோடி டாலர் மதிப்பிலான கால்நடைகள், பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம்

போன்ற அண்டை நாடுகளுக்கு கடத்தப்படுகின்றன.- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

## நடப்பு ஆண்டு கரீப் பருவத்தில் சாகுபடி பரப்பளவு 10 கோடி ஹெக்டேராக அதிகரிப்பு

புதுடில்லி:நடப்பாண்டு கரீப் பருவத்தில், பல்வேறு தானியங்களின் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. அதேசமயம், பருத்தி, கரும்பு மற்றும் சணல் ஆகியவற்றின் பயிர் பரப்பளவு குறைந்துள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நாட்டின் தொழில்துறையில் கடும் சுணக்க நிலை காணப்படுகிறது. பல்வேறு காரணங்களால், பொருளாதார வளர்ச்சியும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.ரூபாய் மதிப்பு:நிதி, நடப்பு கணக்கு பற்றாக்குறை, ஏற்றுமதி குறைந்து போனது மற்றும் செலாவணி வரத்தில் பின்னடைவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு மிகவும் வீழ்ச்சி கண்டுள்ளது.

இது போன்ற பல்வேறு பாதகமான சுழ்நிலை நிலவி வரும் நிலையில், நடப்பாண்டு, நாட்டின் வேளாண் உற்பத்தி, சிறப்பாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, நாட்டுக்கு ஆறுதல் தரும் செய்தியாக அமைந்துள்ளது. வேளாண் உற்பத்தி அதிகரிக்கும் நிலையில், அது நாட்டின் பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வர வழிவகுக்கும் என, பல்வேறு ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நடப்பு வார இறுதி நிலவரப்படி, உள்நாட்டில், கரீப் பருவத்தில் ஒட்டு மொத்த சாகுபடி பரப்பளவு, 10 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 9.40 கோடி ஹெக்டேராக இருந்தது.எண்ணெய் வித்துக்கள்:கணக்கீட்டு காலத்தில், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு, 21 லட்சம் ஹெக்டேர் அதிகரித்து, 167 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 188 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. நாட்டின் பல மாநிலங்களில், ஜுன் மாதம் முதல், தென்மேற்கு பருவ மழை சிறப்பான அளவில் பெய்து வருகிறது. இதன்

காரணமாக, சோயா, நிலக்கடலை, சூரியகாந்தி, எள் உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு உயர்ந்துள்ளது.

நடப்பு வார இறுதி நிலவரப்படி, நெல் சாகுபடி பரப்பளவு, 345 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 355 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இதற்கு, மழை மட்டுமின்றி, மத்திய அரசு, ஒரு குவிண்டால் நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை, 1,310 ரூபாயாக உயர்த்தியுள்ளது. மேலும், வெளி சந்தைகளிலும், நெல்லுக்கான தேவை அதிகரித்து உள்ளது. இதுவும், விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பருத்தி சாகுபடி:பருப்பு வகைகள் சாகுபடி பரப்பளவு, 88.31 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 101.81 லட்சம் ஹெக்டேராக வளர்ச்சி கண்டுள்ளது. இதர தானியங்கள் சாகுபடி பரப்பளவும், 168.13 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 190.55 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.அதேசமயம், பருத்தி சாகுபடி பரப்பளவு, கணக்கீட்டு காலத்தில், 112.83 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 111.65 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது.கடந்த ஆண்டு, பல்வேறு மாநிலங்களில், பருவ மழை குறைந்து, வறட்சி காணப்பட்டதால், முந்தைய 2011ம் ஆண்டில், மேற்கொள்ளப்பட்ட பருத்தி சாகுபடி பரப்பில், 5 லட்சம் ஹெக்டேர் குறைந்திருந்தது.

நடப்பாண்டில், பருத்திக்கு நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பால், மத்திய பிரதேசம், ஆந்திரா மற்றும் தமிழகம் ஆகிய மாநில விவசாயிகள், பருத்தி சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.குறிப்பாக, "சங்கர்-6' வகை பருத்திக்கு, உள்நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் அதிக கிராக்கி உள்ளது.

தற்போது, 356 கிலோ கொண்ட, ஒரு கேண்டி, இப்பருத்தியின் விலை,47,500 ரூபாய் என்ற அளவில் உள்ளது.உற்பத்தி:கரும்பு சாகுபடி பரப்பளவு, கணக்கீட்டு காலத்தில், 50.06 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 48.74 லட்சம் ஹெக்டேராகவும், சணல் மற்றும் மெஸ்தா ஆகியவற்றின் சாகுபடி பரப்பு, 8.45 லட்சம்

ஹெக்டேரிலிருந்து, 8.31 லட்சம் ஹெக்டேராகவும் சரிவுஅடைந்துள்ளது.இந்நிலையில், வடகிழக்கு பருவ மழை நன்கு பெய்யும் நிலையில், ஒட்டு மொத்த வேளாண் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்க வாய்ப்புள்ளது என, பல்வேறு ஆராய்சி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**02.09.2013**

**வாழைத்தார் விலை ரூ.50 முதல் ரூ.100 வரை உயர்வு**




பரமத்திவேலூர் : நாமக்கல் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பூவன், ரஸ்தாளி, பச்சைநாடன், கபூரவள்ளி, மொந்தன் உள்ளிட்ட பல்வேறு ரக வாழை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதேபோல் இங்கு விளையும் வாழைத்தார்களை விவசாயிகள் பரமத்தி வேலூர் தினசரி ஏல மார்க்கெட்டிற்கு கொண்டு வருகின்றனர். இங்கு ஏலம் எடுப்பதற்காக கரூர், திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வருகின்றனர். அவர்கள் இங்கிருந்து கர்நாடகா, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சென்னை, பெங்களூர் உள்ளிட்ட பெரு நகரங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த வாரம் நடைபெற்ற வாழைத்தார் ஏலத்தில் பூவன்தார் ரூ.350க்கும், பச்சை நாடன் ரூ.250க்கும், மொந்தன் ரூ.500க்கும், கற்பூர வள்ளி ரூ.200க்கும், ரஸ்தாளி ரூ.250க்கும் ஏலம் போனது. நேற்று முன் தினம் நடந்த ஏலத்தில் பூவன்தார் ரூ.400க்கும், பச்சை நாடன் ரூ.350க்கும், மொந்தன்

ரூ.600க்கும், கற்பூர வள்ளி ரூ.250க்கும், ரஸ்தாளி ரூ.350க்கும் ஏலம் போனது. இதில் கடந்த வார விலையை ஒப்பிடுகையில் வாழைத்தார் விலை ரூ.50 முதல் ரூ.100வரை அதிகரித்துள்ளது.

**ரூபாய் மதிப்பு சரிவு, வரத்து குறைவு துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு மூட்டைக்கு ரூ.500 விலை உயர்வு**



சேலம்: ரூபாய் மதிப்பு சரிவு மற்றும் சிறுதானிய பொருட்களின் வரத்து குறைந்ததால் துவரம்பருப்பு, உளுத்தம்பரும்பு ஆகியவை மூட்டைக்கு ரூ.500 வரை விலை உயர்ந்துள்ளது. இந்தியாவில் மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில் துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, பாசி பருப்பு, பச்சை பயிறு, சிவப்பு கொண்டை கடலை, வெள்ளை கொண்டை கடலை, பட்டாணி பருப்பு, பொட்டுக்கடலை, தட்டைப்பயிறு உள்ளிட்ட சிறுதானிய பொருட்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இங்கு விளையும் தானியங்களை விவசாயிகள் அறுவடை செய்து பல்வேறு மாநிலங்களுக்கு டன் கணக்கில் அனுப்பி வருகின்றனர்.

தற்போது வட மாநிலங்களில் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு விளைச்சல் குறைந்ததாலும், ரேஷனுக்கு தேவையான துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு ஆகியவற்றை சப்ளை செய்ய அரசு டெண்டர் கோரியுள்ளதாலும், ரூபாய் மதிப்பு சரிவாலும் இவற்றின் விலை உயர்ந்து வருகிறது.

கடந்த சில நாட்களாக வட மாநிலங்களில் இருந்து துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு, கடலைப்பருப்பு, பட்டாணிப்பருப்பு, பொட்டுக்கடலை வரத்து குறைந்தது. ரூபாய் மதிப்பு சரிந்ததால் பருப்பு விலை 100 கிலோ எடை கொண்ட மூட்டைக்கு ரூ.500 வரை உயர்ந்துள்ளது.

இது குறித்து சேலம் லீ பஜார் வியாபாரிகள் கூறியதாவது:கடந்த சில நாட்களுக்கு முன்புவரை ரூ.6300க்கு விற்ற 100 கிலோ எடை கொண்ட துவரம் பருப்பு மூட்டை நேற்று ரூ.6800க்கு விற்பனை செய்யப்பட்டது. ரூ.6400க்கு விற்ற உளுத்தம்பருப்பு ரூ.6900க்கும், ரூ.7400க்கு விற்ற பாசிப்பருப்பு ரூ.7900க்கும் விற்பனை செய்யப்பட்டது. பட்டாணி பருப்பு விலையும் அதிகரித்தது. ரூ.1800க்கு விற்ற 50 கிலோ எடை கொண்ட ரூ.1850க்கும், ரூ.2 ஆயிரத்துக்கு விற்ற கடலைப்பருப்பு ரூ.2250க்கும், ரூ.3 ஆயிரத்துக்கு விற்ற 55 கிலோ எடை கொண்ட பொட்டுக்கடலை மூட்டை ரூ.3500க்கும் விற்கப்பட்டது. இந்த விலை இன்னும் ஒரு சில மாதங்கள் நீடிக்கும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 02.09.2013

### முன்னுரிமை கடன் இலக்கை எட்ட முடியாத 28 வங்கிகள்

சென்ற 2012–13–ஆம் நிதி ஆண்டில் 28 வங்கிகளால் முன்னுரிமை கடன் இலக்கை எட்ட முடியவில்லை.



<u>ரிசர்வ் வங்கி தகவல்</u>

26 பொதுத் துறை வங்கிகளில் 16 வங்கிகளாலும், 20 தனியார் வங்கிகளில் 10 வங்கிகளாலும், 41 வெளிநாட்டு வங்கிகளில் 2 வங்கிகளாலும் முன்னுரிமை கடன் இலக்கை எட்ட முடியவில்லை என பாரத ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

விவசாயம், குறு மற்றும் சிறு நிறுவனங்கள், கல்வி மற்றும் வீட்டு வசதி போன்ற துறைகளுக்கு வழங்கப்படும் கடன் முன்னுரிமை கடன் என்று அழைக்கப்படுகிறது. வங்கிகள் வழங்கும் மொத்த கடனில் உள்நாட்டு வங்கிகள் 40 சதவீதத்தையும், வெளிநாட்டு வங்கிகள் 32 சதவீதத்தையும் முன்னுரிமை பிரிவுகளுக்கு வழங்க வேண்டும்.

சென்ற நிதி ஆண்டில் பொதுத் துறை வங்கிகள் ரூ.12.82 லட்சம் கோடியை முன்னுரிமை கடனாக வழங்கி உள்ளன. இது நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 36.2 சதவீதமாகும். தனியார் வங்கிகள் வழங்கிய கடன் 37.5 சதவீதமாகவும் (ரூ.3.27 லட்சம் கோடி) வெளிநாட்டு வங்கிகள் வழங்கிய கடன் (ரூ.84,854 கோடி) 35.1 சதவீதமாகவும் உள்ளது.

வேளாண் கடன்

அதேசமயம் சென்ற நிதி ஆண்டில் வேளாண் துறைக்கு வழங்கப்பட்ட கடன் இலக்கை காட்டிலும் 5.6 சதவீதம் அதிகரித்து ரூ.5.75 லட்சம் கோடியிலிருந்து ரூ.6.07 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டிலும் நிர்ணயித்த இலக்கை விஞ்சி வேளாண் கடன் அதிகரிக்க வாய்ப்புள்ளது. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் முந்தைய நிதி ஆண்டைக் காட்டிலும் 29.8 சதவீதம் அதிகரித்துள்ளது.

**சங்கரன்கோவிலில் விவசாயிகள் தொழிற்கடன் தொடங்க ரூ.1 கோடி கடன் உதவி அமைச்சர் செந்தூர் பாண்டியன் வழங்கினார்**

சங்கரன்கோவில்,

விவசாயிகள் தொழில் தொடங்க 1 கோடியே 10 லட்சம் ரூபாய் கடன் உதவியை அமைச்சர் செந்தூர்பாண்டியன் வழங்கினார்.

கடன் வழங்கும் விழா

சங்கரன்கோவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நடைபெற்ற விழாவில் விவசாயிகள் கறவை மாடுகள் வாங்கவும், தொழில் தொடங்கவும் ரூ.1 கோடியே 10 லட்சம் கடன் உதவி வழங்கும் விழா நடைபெற்றது. நெல்லை மாவட்ட கலெக்டர் சி.சமயமூர்த்தி தலைமை தாங்கினார். வீட்டு வசதி வாரிய தலைவர் ஆர்.முருகையாபாண்டியன், முத்துச்செல்வி எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர். நெல்லை ஆவின் பெருந்தலைவர் ரமேஷ் வரவேற்றுப் பேசினார்.

பாண்டியன் கிராம வங்கி தலைவர் கார்த்திகேயன், சங்கரன்கோவில் நகரசபை தலைவர் கண்ணன், ஆவின் துணை பதிவாளர் சண்முகராஜ் குமார், ஆவின் பொது மேலாளர் பாலாஜி, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ராமலிங்கம் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

154 விவசாயிகள்

விழாவில் 154 விவசாயிகளுக்கு 1 கோடியே 10 லட்ச ரூபாய் கடன் உதவியை அமைச்சர் செந்தூர்பாண்டியன் வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:–

தமிழகம் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் முதல்–அமைச்சர் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கல்வியில் தமிழகம் தலை சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக அந்த துறைக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளுக்கு பென்சில் முதல் லேப்டாப் வரை அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு பல நல்ல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகள் இந்த கடன் தொகையை விரைவாக திருப்பி செலுத்தி மீண்டும் வங்கி உதவி பெற்று தொழிலில் சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் செந்தூர்பாண்டியன் பேசினார்.

யூனியன் தலைவர்கள் அன்னலட்சுமி, முருகையா, மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் தர்மராஜ், தொகுதி இணை செயலாளர் வேல்ச்சாமி, சங்கரன்கோவில் நகர செயலாளர் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் பரமசிவம், ராமசாமிபாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.